068/DD/19

TC-133

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

## REGISTRATION DEPARTMENT TEST – GROUP – II

(Without Books)

Maximum Time : 2 hours

Maximum Marks : 80

### *IMPORTANT INSTRUCTIONS*

### OBJECTIVE TYPE

கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

**NB : Words of masculine gender in these instructions shall, where the context so require, be taken to include feminine gender.**

இந்த அறிவுறுத்தலில் ஆண் பாலினரின் வார்த்தைகளில், சூழலுக்கேற்ப தேவைப்படின் பெண் பாலினரின் வார்த்தைகளும் அடங்கும்.

**This booklet should not be opened till the Invigilator gives a signal to open it. As soon as the signal is received you should open the booklet and then proceed to answer the questions.**

இந்த வினாத்தொகுப்பினை கண்காணிப்பாளரின் அனுமதி பெறுவதற்கு முன்னர் திறக்ககூடாது. கண்காணிப்பாளர் வினாத்தொகுப்பினை திறப்பதற்கு அனுமதி அளித்தவுடன் வினாத்தொகுப்பினை திறந்து விடையளிக்க தொடங்கலாம்.

1. This question booklet contains 80 number of objective type questions. Prior to attempting to answer, the candidate is requested to check whether all questions are there and ensure that there are no blank pages in the question booklet. In case, if any defect is noticed in the question paper, it shall be reported to the Invigilator immediately, **<u>within first 10 minutes</u>** after which no request will be entertained.

   இவ்வினாத்தாள் 80 கொள்குறி வகை வினாக்களை கொண்டது. விண்ணப்பதாரர்கள் விடையளிக்க தொடங்கும் முன், வினாத்தாளில் எல்லா வினாக்களும் இடம் பெற்றுள்ளனவா என்பதையும், ஏதேனும் சில பக்கங்கள் / வினாக்கள் அச்சிடப்படாமல் விடுபட்டுள்ளனவா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும். வினாத்தாளில் ஏதேனும் குறை இருப்பின் வினாத்தாளைப் பெற்ற பின் பத்து நிமிடங்களுக்குள் அறை கண்காணிப்பாளரிடம் தெரிவிக்க வேண்டும். அதற்கு பிறகு தெரிவிக்கப்படும் கோரிக்கைகள் ஏதும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

2. Answers all questions. All questions carry equal marks.

   அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். அனைத்து வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.

**[Turn over**

3. Candidate must write his Register Number in the space provided on the top right side of this booklet alone. Do not write anything else on the Question Booklet.

விண்ணப்பதாரரின் பதிவெண்ணை இவ்வினாத்தாளின் மேல் வலது பக்கத்தில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுத வேண்டும். வினாத்தாளில் வேறு எதையும் எழுதக் கூடாது.

4. The sheet before the last page of the question booklet shall be used for any rough work.

வினாத்தாளின் கடைசி பக்கத்திற்கு முன் பக்கத்தில் rough work எழுதி பார்க்க உபயோகித்துக் கொள்ளவும்.

5. (a) Each question comprises of four responses i.e. (A), (B), (C) and (D). Candidate shall select only one correct response. In case, if the candidate feels that there are more than one correct response, **shade the response which he considers is the best**.

(b) In any case, a candidate shall choose only one response for each question.

(c) **If more than one answer is shaded for a question, the answer will be treated as wrong and no mark will be given for that question.**

(d) The total marks will depend on the total number of correct responses marked in the OMR answer sheet. (For this purpose, only one shaded circle for a question will be taken into account for awarding mark)

(a) ஒவ்வொரு வினாவிற்கும் (A), (B), (C), (D) என நான்கு விடைகள் கொடுக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர் அவற்றில் ஏதேனும் ஒரு சரியான விடையைத் தேர்வு செய்ய வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு வினாவிற்கு இருப்பதாக கருதினால், **அவற்றில் எவ்விடை மிகச் சரியானது என கருதுகிறீர்களோ, அவ்விடையை நிழலிட்டு காட்ட வேண்டும்.**

(b) எவ்வாறிருப்பினும், ஒரு வினாவிற்கு ஒரே ஒரு விடையைத் தான் தேர்ந்தெடுக்க வேண்டும்.

(c) **ஒரு வினாவிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட வட்டங்களில் விடையளிக்கப்பட்டிருந்தால் அவ்விடை தவறானதாக கருதப்பட்டு, அவ்வினாவிற்கு மதிப்பெண் வழங்கப்படமாட்டாது.**

(d) OMR விடைத் தாளில் குறிக்கப்பட்ட சரியான விடைகளைப் பொறுத்து, மொத்த மதிப்பெண்கள் வழங்கப்படும் (ஒரு வினாவிற்கு ஒரு வட்டத்தில் (குறிப்பிட்ட) நிழலிட்ட விடை மட்டுமே மதிப்பெண் வழங்க கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்).

6. Do not mark the answers in the Question Booklet.

வினாத்தாளில் விடைகளைக் குறிப்பிடக் கூடாது.

7. Candidate shall not remove or tear off any sheet from this question booklet. During the examination he is not allowed to take the question booklet out of the examination hall. Only after the examination is over, he shall be allowed to take the question booklet.

விண்ணப்பதாரர், வினாத்தாளின் எந்த ஒரு பக்கத்தையும், நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நடைபெறும் போது, வினாத்தாளை தேர்வு கூடத்தைவிட்டு வெளியே எடுத்து செல்ல அனுமதி கிடையாது. தேர்வு முடிந்த பின்னரே வினாத்தாளை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

8. Failure to comply with any of the above instructions will render you liable to such action or penalty as the Commission may decide.

மேற்கண்ட அறிவுரைகளில் ஏதேனும் மீறப்படுமேயானால் தேர்வாணையம் எடுக்கும் தண்டனை / நடவடிக்கைக்கு உள்ளாக நேரிடும்.

9. In case of doubt, English version is the final.

வினாக்களில் சந்தேகமிருப்பின், ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

1. Which section defines the term "Conveyance"?

(A) 2(10) (B) 2(11)

(C) 2(26) (D) 2(18)

"உரிமை மாற்றாவணம்" என்பதற்கு எந்தப் பிரிவில் விளக்கம் அளிக்கப்படுகிறது?

(A) 2(10) (B) 2(11)

(C) 2(26) (D) 2(18)

2. Which section provides Instruments chargeable with duty?

(A) 9 (B) 20

(C) 3 (D) 13

இந்திய முத்திரைச் சட்டத்தில் எந்தப் பிரிவு தீர்வை விதிக்கத்தக்க முறை ஆவணங்கள் குறித்து விளக்குகிறது.

(A) 9 (B) 20

(C) 3 (D) 13

3. Which section provides "Any instrument comprising or relating to several distinct matters shall be chargeable with the aggregate amount of the duties with which separate instruments each comprising or relating to one of such matters?

(A) 3 (B) 4

(C) 5 (D) 6

"பல்வேறுபட்ட பொருட்பாடுகள் அடங்கப்பெற்ற அல்லது அவை தொடர்பான முறையாவணம் எதுவும் அத்தகைய பொருட்பாடுகளில் ஒன்று அடங்கப்பெற்ற அல்லது அதன் தொடர்பான தனித்தனியான முறையாவணங்கள் ஒவ்வொன்றிற்கும் இந்தச் சட்டத்தின்படி விதிக்கத்தக்கதாகும் தீர்வைகளின் மொத்தத் தீர்வை தொகையுடன் விதிக்கத்தக்கதாதல் வேண்டும்" என எந்தப் பிரிவு சொல்கிறது.

(A) 3 (B) 4

(C) 5 (D) 6

4. Which section provides "Conversion of a branch of any bank into a wholly owned subsidiary of bank or transfer of shareholding of a bank to a holding company of bank" not liable to duty under ISA?

(A) 47(B) (B) 8(E)

(C) 19(B) (D) 23(A)

எந்த ஒரு வங்கியின் கிளையினையும் வங்கியின் முழு உடமை துணை வங்கியாக மாற்றம் செய்தாலோ அல்லது ஒரு வங்கியின் பங்குரிமையினை அதன் கைப்பற்றுதலிலான வங்கிக்கு (holding bank) மாற்றம் செய்தாலோ அது முத்திரைத் தீர்வை விதிப்பிற்குட்பட்டதல்ல என இந்திய முத்திரைச் சட்டத்தின் எப்பிரிவு கூறுகிறது.

(A) 47(B) (B) 8(E)

(C) 19(B) (D) 23(A)

5. Which section explains How the Duties to be paid?

(A) 11 (B) 3

(C) 13 (D) 10

தீர்வைகள் எவ்வாறு செலுத்தப்பட வேண்டும் என எந்தப்பிரிவு விளக்குகிறது?

(A) 11 (B) 3

(C) 13 (D) 10

6. The stamp duty paid to the previous instrument is denoted by way of endorsement by the collector under this section

(A) 14 (B) 11

(C) 41 (D) 16

இந்தப் பிரிவின்படி ஆட்சியர் அவர்களின் மேலெழுத்தின்படி முந்தைய முறையாவணத்தில் செலுத்தப்பட்ட முத்திரைத் தீர்வை குறித்துக் காட்டப்படுகிறது.

(A) 14 (B) 11

(C) 41 (D) 16

7. Where any instrument is registered in any part of India other than the state of Tamil Nadu and such instrument relates to property situate in Tamil Nadu the copy of such instrument is charged with difference of duty as on the original instrument under this section of ISA.

(A) 19(A)
(B) 19(B)
(C) 33(A)
(D) 47(B)

இந்திய முத்திரைச் சட்டத்தின் இந்தப் பிரிவின்படி தமிழ்நாடு மாநில அரசின் எல்லைக்கப்பால் இந்திய தேசத்தில் எந்தவொரு பகுதியிலும் பதிவு செய்யப்படும் எந்தவொரு ஆவணமும் தமிழ்நாட்டிலுள்ள சொத்து சம்மந்தப்பட்ட ஆவணமாக இருக்குமானால் அசல் ஆவணத்தினைப் போன்று வித்தியாச அளவு தீர்வை விதிக்கத்தக்கதாகும்.

(A) 19(A)
(B) 19(B)
(C) 33(A)
(D) 47(B)

8. If there is no contract or recital in the instrument who has to bear the stamp duty in respect of "Certificate of Sale"

(A) The person drawing the instrument
(B) The Purchaser of the property
(C) The Parties in equal shares
(D) The Civil Court

"விற்பனைச் சான்று" ஆவணத்திற்கு மாறுபட்ட ஒப்பந்தம் இல்லாத நிலையில் முத்திரைத் தீர்வை செலுத்த வேண்டிய பொறுப்புடையவர் யார்?

(A) முறையாவணத்தை வரைகின்றவர்
(B) சொத்தை வாங்குபவர்
(C) சமப் பங்குகளைக் கொண்டுள்ள தரப்பினர்கள்
(D) உரிமையியல் நீதிமன்றம்

9. The instrument executed in India shall be presented before the collector for adjudication within

(A) 1 month
(B) 2 months
(C) 3 months
(D) 6 months

இந்தியாவில் எழுதிக் கொடுக்கப்பட்ட ஆவணமாக இருப்பின் தீர்வுறுதி (Adjudication) பெற ஆட்சியரிடம் (Collector) எவ்வளவு நாட்களுக்குள் தாக்கல் செய்ய வேண்டும்.

(A) 1 மாதத்திற்குள்
(B) 2 மாதத்திற்குள்
(C) 3 மாதத்திற்குள்
(D) 6 மாதத்திற்குள்

10. Under which section the collector adjudicates as to proper stamp for any instrument brought to him.

(A) 31
(B) 32
(C) 33
(D) 34

ஆட்சியரிடம் கொண்டு வரப்பட்ட முறையாவணம் எந்தப்பிரிவின் கீழ் தீர்வுறுதி (Adjudication) செய்யப்படுகிறது.

(A) 31
(B) 32
(C) 33
(D) 34

11. The Collector has power to levy penalty for the instrument impounded.

(A) Not more than 15 times of the proper or deficit Stamp duty
(B) Not more than 20 times of the proper or deficit Stamp duty
(C) Not more than 50 times of the proper or deficit Stamp duty
(D) Not more than 10 times of the proper or deficit Stamp duty

முடக்கம் செய்யப்பட்ட ஆவணங்களுக்கு எவ்வளவு அபராதம் விதிக்க ஆட்சியருக்கு அதிகாரம் உள்ளது.

(A) உரிய அல்லது குறைவு தீர்வைக்கு 15 மடங்கிற்கு மிகாமல்
(B) உரிய அல்லது குறைவு தீர்வைக்கு 20 மடங்கிற்கு மிகாமல்
(C) உரிய அல்லது குறைவு தீர்வைக்கு 50 மடங்கிற்கு மிகாமல்
(D) உரிய அல்லது குறைவு தீர்வைக்கு 10 மடங்கிற்கு மிகாமல்

12. Who is authorized to refund the penalty or excess duty paid under section 35 or 40 of Indian Stamp Act.

(A) District Registrar
(B) Deputy Inspector General of Registration
(C) Chief controlling Revenue Authority
(D) Collector

இந்திய முத்திரைச்சட்டம் பிரிவு 35 அல்லது 40ன் படி கூடுதலாக வசூலிக்கப்பட்ட பணத்தண்டம் அல்லது மிகையான தீர்வையை திரும்ப வழங்க அதிகாரம் பெற்றவர்.

(A) மாவட்டப் பதிவாளர்
(B) துணைப்பதிவுத் துறைத்தலைவர்
(C) முதன்மை வருவாய் கட்டுப்பாட்டு அதிகாரி
(D) ஆட்சியர்

13. The section which provides levy of interest for the 'default period' under section 47(A)

(A) 47A(1) (B) 47A(3)

(C) 47A(4) (D) 47A(5)

பிரிவு 47A ன் கீழ் மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்ட ஆவணத்திற்கு முத்திரை தீர்வை செலுத்தாமல் தாமதம் செய்த காலத்திற்கு வட்டி விதிப்பது இப்பிரிவு ஆகும்.

(A) 47A(1) (B) 47A(3)

(C) 47A(4) (D) 47A(5)

14. Penalty under section 63 for failure to cancel adhesive stamp is.

(A) Fine upto Rs. 100 (B) Fine upto Rs. 500

(C) Fine upto Rs. 50 (D) Fine upto Rs. 1000

ஒட்டுவகை முத்திரையை இரத்து செய்யத் தவறியதற்காக பிரிவு 63ன் கீழ் விதிக்கப்படும் தண்டனை

(A) ரூ. 100 வரை (B) ரூ. 500 வரை

(C) ரூ. 50 வரை (D) ரூ. 1000 வரை

15. The stamp duty to be paid for the Adoption Deed is

(A) Rs. 500 (B) Rs. 50

(C) Rs. 100 (D) Rs. 300

'தத்து ஆவணத்திற்கு' செலுத்த வேண்டிய முத்திரைத் தீர்வை

(A) ரூ. 500 (B) ரூ. 50

(C) ரூ. 100 (D) ரூ. 300

16. A Joint affidavit by two persons in the same matter is chargeable with duty of

(A) Rs. 20 (B) Rs. 40

(C) Rs. 100 (D) Rs. 200

ஒரே விஷயத்தினை பொருத்து இரு நபர்களால் இணைந்து எழுதிக் கொடுக்கப்படும் இணை உறுதிமொழி (Joint Affidavit) க்கு செலுத்த வேண்டிய முத்திரைத் தீர்வை

(A) ரூ. 20 (B) ரூ. 40

(C) ரூ. 100 (D) ரூ. 200

17. The Stamp duty to be paid for the Bond as defined by section 2(5) where the amount of value is Rs. 10,000

(A) Rs. 25
(B) Rs. 241
(C) Rs. 216
(D) Rs. 12

முத்திரைச் சட்டப் பிரிவு 2(5)ல் விளக்கப்பட்டுள்ள வெண்ணிலைக் கடன் பத்திரம் (Bond) மதிப்பு ரூ. 10,000-க்கு செலுத்த வேண்டிய முத்திரைத் தீர்வை

(A) ரூ. 25
(B) ரூ. 241
(C) ரூ. 216
(D) ரூ. 12

18. The stamp duty for counter part or Duplicate where the original instrument was chargeable with duty of Rs. 5000

(A) Rs. 20
(B) Rs. 10
(C) Rs. 5
(D) Rs. 50

அசல் ஆவணத்திற்கு விதிக்கத்தக்க முத்திரைத் தீர்வை ரூ. 5,000 எனும் போது அதன் எதிர்பிரதி அல்லது பிரதிக்கு விதிக்கத்தக்க முத்திரைத் தீர்வை

(A) ரூ. 20
(B) ரூ. 10
(C) ரூ. 5
(D) ரூ. 50

19. The word 'family' under Article 58 does not include.

(A) Grand Son
(B) Adopted Son
(C) Brother
(D) Grand Father

கூறு 58ன் படி 'குடும்பம்' என்ற வரையறைக்குள் உட்படாதது.

(A) பேரன்
(B) சுவீகார மகன்
(C) சகோதரன்
(D) தாத்தா

20. The Chairman of the Valuation committee constituted under section 47-AA is

(A) The secretary

(B) The Collector

(C) Additional Inspector General of Registration (Guide lines)

(D) Inspector General of Registration

பிரிவு 47-AA ன் கீழ் அமைக்கப்பட்ட மதிப்பீட்டுக் குழுவின் தலைவர்

(A) அரசு செயலர்

(B) ஆட்சியர்

(C) கூடுதல் பதிவுத்துறைத்தலைவர் (வழிகாட்டி)

(D) பதிவுத் துறைத்தலைவர்

21. The "proper officer" within the meaning of rule 9 of the Indian stamp Rules 1925 does not include.

(A) The superintendent of Stamps

(B) All Sub-Registrars

(C) The Inspector General of Registration

(D) All Treasury Officers

இந்திய முத்திரைச் சட்டம் விதிகள் 1925 விதி 9-ன் படி 'முறையான அலுவலர்' என்பதற்கு உட்படாதவர்

(A) முத்திரைத்தாள் கண்காணிப்பாளர்

(B) அனைத்து சார்பதிவாளர்கள்

(C) பதிவுத் துறைத்தலைவர்

(D) அனைத்து கருவூல அலுவலர்கள்

22. Who can create the post of Licensed Stamp Vendors for the Sale of Stamps?

(A) Inspector General of Registration (CCRA)

(B) Deputy Inspector General of Registration (DIG)

(C) District Registrar (DR)

(D) Assistant Inspector General of Registration (AIG)

முத்திரைத்தாட்கள் விற்பதற்கு உரிமம் பெற்ற விற்பனையாளர்கள் பணியிடங்களை ஏற்படுத்துபவர் யார்?

(A) பதிவுத் துறைத்தலைவர் (CCRA)

(B) துணை பதிவுத்துறைத் தலைவர் (DIG)

(C) மாவட்டப் பதிவாளர் (DR)

(D) உதவி பதிவுத்துறைத் தலைவர் (AIG)

23. Which Rule empowers the District Registrar to make appointment of Licensed Stamp Vendors?

(A) Rule 20 of T.N. Stamp Rules
(B) Rule 25 of T.N. Stamp Rules
(C) Rule 24 of T.N. Stamp Rules
(D) Rule 32 of T.N. Stamp Rules

உரிமம் பெற்ற முத்திரைத்தாள் விற்பனையாளர்களை நியமிக்க மாவட்டப் பதிவாளருக்கு அதிகாரம் எந்த விதியில் வழங்கப்பட்டுள்ளது.

(A) தமிழ்நாடு முத்திரை விதிகளில் விதி 20
(B) தமிழ்நாடு முத்திரை விதிகளில் விதி 25
(C) தமிழ்நாடு முத்திரை விதிகளில் விதி 24
(D) தமிழ்நாடு முத்திரை விதிகளில் விதி 32

24. An instrument is presented before sub registrar for registration. He is of opinion that it is not duly stamped. The party to the document refuses to pay the deficit stamp duty. What shall the Sub Registrar do?

(A) Register the document and send a report to the District Registrar for action under section 33-A
(B) Impound the document and send the original with a true copy to the District Registrar
(C) Register the document and send it to the Revenue authorities under section 47A(1)
(D) Refuse to register the document

ஒரு முறையாவணமானது சார்பதிவாளரிடம் பதிவிற்கு தாக்கல் செய்யப்படுகிறது. அவ்வாவணம் போதிய முத்திரைத் தீர்வை தாங்கியிருக்கவில்லை என அவர் கருதுகிறார். கட்சிக்காரர் குறைவு முத்திரைத் தீர்வை செலுத்த மறுக்கிறார். இந்நிலையில் சார்பதிவாளர் என்ன செய்ய வேண்டும்?

(A) ஆவணத்தினை பதிவு செய்து பிரிவு 33A ன் கீழ் நடவடிக்கை எடுக்கும்பொருட்டு மாவட்டப் பதிவாளருக்கு அறிக்கை அனுப்ப வேண்டும்
(B) ஆவணத்தினை முடக்கம் (Impound) செய்து உண்மை நகலுடன் அசல் ஆவணத்தினையும் மாவட்டப்பதிவாளருக்கு அனுப்ப வேண்டும்
(C) ஆவணத்தினை பதிவு செய்து பிரிவு 47A(1)ன் கீழ் வருவாய் துறை அதிகாரிகளுக்கு அனுப்ப வேண்டும்
(D) ஆவணப் பதிவை மறுக்க வேண்டும்

25. According to which section the market value and all other facts affecting the chargeability of any instrument shall be fully and truly set forth therein.

(A) 47 (B) 31

(C) 27 (D) 19

எந்தப் பிரிவின்படி முத்திரைத் தீர்வை விதிப்பிற்குத் தேவையான சந்தை மதிப்பு மற்றும் இதர காரணிகள் அனைத்தும் உண்மையாகவும், முழுமையாகவும் ஆவணத்தில் குறிக்கப்படல் வேண்டும்.

(A) 47 (B) 31

(C) 27 (D) 19

26. 'A' Mortgages a land to 'B' for 3,00,000/- The possession is given to the Mortgagee. Calculate the stamp duty to be collected (including surcharge if any) by the Registering Officer.

(A) Rs. 3,000 (B) Rs. 12,000

(C) Rs. 21,000 (D) Rs. 24,000

ரூ. 3,00,000-க்கு 'A' என்பவர் 'B' என்பவரிடம் நிலத்தினை அடமானம் வைக்கிறார். அடமானம் பெறுபவரிடம் சுவாதீனம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பதிவு அலுவலர் வசூலிக்க வேண்டிய முத்திரைத் தீர்வையை (மிகுவரி சேர்த்து) கணக்கிடுக.

(A) ரூ. 3,000 (B) ரூ. 12,000

(C) ரூ. 21,000 (D) ரூ. 24,000

27. A partition Deed executed at Kerala on 1.10.2016 and brought to Chennai on 1.12.2016. It can be presented for adjudication under section 32 before District Registrar. The District Registrar Shall

(A) Adjudicate the Document

(B) Refuse to Adjudicate the Document

(C) Send the document to the DIG for Adjudication

(D) Send it to Revenue Authority for collection of Stamp duty

கேரள மாநிலத்தில் 1.10.2016-ல் எழுதப்பட்ட ஒரு பாக ஆவணம் 01.12.2016-ல் சென்னைக்கு கொண்டு வரப்பட்டது. இது மாவட்டப் பதிவாளரிடம் பிரிவு 32ன் கீழ் முறையான முத்திரைத் தீர்வுறுதி (Adjudication) க்காக தாக்கல் செய்யப்படுகிறது. மாவட்டப்பதிவாளர் செயல்படுவது.

(A) ஆவணத்தினை தீர்வுறுதி செய்ய வேண்டும்

(B) ஆவணத்தினை தீர்வுறுதி செய்ய மறுக்க வேண்டும்

(C) தீர்வுறுதிக்கு துணைப்பதிவுத் துறைத் தலைவருக்கு அனுப்ப வேண்டும்

(D) முத்திரைத் தீர்வை வசூலிக்க வருவாய் துறைக்கு அனுப்ப வேண்டும்

28. What is the time limit for applying for refund of the spoiled (stamp paper) instrument which is sent out of India now received.

(A) Within 6 months after it has been received back in India

(B) Within 6 months from the date of purchase of the stamp paper

(C) Within 3 months from the date of purchase of stamp paper

(D) Within 2 months after the stamp has been spoiled

இந்தியாவிற்கு வெளியில் அனுப்பப்பட்ட முத்திரைத்தாள் தற்போது இந்தியாவில் மீளப்பெறப்படுகிறது. பாழான முத்திரைத்தாளை திருப்பிக்கொடுத்து பணமாக்குவதற்கு விண்ணப்பிக்க உரிய கால அளவு யாது?

(A) இந்தியாவில் மீளப் பெறப்பட்டத்திலிருந்து 6 மாதத்திற்குள்

(B) முத்திரைத்தாள் வாங்கிய நாளிலிருந்து 6 மாதத்திற்குள்

(C) முத்திரைத்தாள் வாங்கிய நாளிலிருந்து 3 மாதத்திற்குள்

(D) முத்திரைத்தாள் பாழானபின் 2 மாதத்திற்குள்

29. Under which section the state Government can reduce or remit stamp duty by notification published in the official Gazette.

(A) 27 (B) 39

(C) 9 (D) 29

எந்தப் பிரிவின்படி மாநில அரசானது அரசிதழில் வெளியிட்டு முத்திரைத் தீர்வையினை குறைக்கவோ அல்லது விலக்கு அளிக்கவோ இயலும்?

(A) 27 (B) 39

(C) 9 (D) 29

30. An agreement relating to deposit of title deeds made by way of security for loan by Mr. 'A' Housing loan Rs. 60,00,000/- and current account by Rs. 2,00,000/- Total aggregating Rs. 62,00,000/-. He has to pay the stamp duty of

(A) Rs. 30,000 (B) Rs. 5,000

(C) Rs. 31,000 (D) Rs. 25,000

திரு. 'A' என்பவர் உரிமை ஆவணங்கள் வைப்பீடு செய்து கடனாக வீட்டுக்கடன் ரூ. 60,00,000, நடப்புக் கடன் ரூ. 2,00,000, ஆக மொத்தம் ரூ. 62,00,000 பெறுகிறார் அவர் செலுத்த வேண்டிய முத்திரைத் தீர்வை

(A) ரூ. 30,000 (B) ரூ. 5,000

(C) ரூ. 31,000 (D) ரூ. 25,000

31. If a father registers the General Power of attorney authorizing his daughter to sell his 5 acre land situate in Madurai. What will be the stamp duty to be levied?

(A) Rs. 10,000
(B) Rs. 1,000
(C) 1% as per guide line value
(D) Rs. 100

மதுரையில் உள்ள 5 ஏக்கர் நிலத்தினை விற்பதற்கு மகளுக்கு அதிகாரம் கொடுத்து பொது அதிகார ஆவணத்தினை தந்தை பதிவு செய்கிறார். அவ்வாவணத்திற்கு விதிக்க வேண்டிய முத்திரைத் தீர்வை எவ்வளவு?

(A) ரூ. 10,000
(B) ரூ. 1,000
(C) வழிகாட்டி மதிப்பின் மீது 1%
(D) ரூ. 100

32. What is the stamp duty (including surcharge) for a sale deed with market value of immovable property Rs. 10,00,000/- and the machinery valued by the valued being Rs. 5,00,000/- (Implanted on earth) Industry Building valued by the AEE Rs. 15,00,000

(A) Rs. 30,000
(B) Rs. 1,50,000
(C) Rs. 2,10,000
(D) Rs. 3,00,000

அசையாச் சொத்தின் மதிப்பு ரூ. 10,00,000-மற்றும் இயந்திரத்தின் மதிப்பு ரூ. 5,00,000 (மண்ணில் நிறுவப்பட்டது) தொழிற்சாலை கட்டிடம் AEE மதிப்பிற்கு ரூ. 15,00,000 என்று எழுதப்பட்ட கிரைய ஆவணத்திற்கு விதிக்கத்தக்க முத்திரைத் தீர்வை (மிகுவரி உட்பட) எவ்வளவு?

(A) ரூ. 30,000
(B) ரூ. 1,50,000
(C) ரூ. 2,10,000
(D) ரூ. 3,00,000

33. What will be the stamp duty for a Release deed executed by a elder brother in favour of his younger brother? Where the property was bought by both of them a year before. The market value of 1/2 share is Rs. 30,00,000?

(A) Rs. 20,000
(B) Rs. 30,000
(C) Rs. 25,000
(D) Rs. 1,20,000

ஒரு வருடத்திற்கு முன்பு அண்ணன், தம்பி இருவரும் கூட்டாக வாங்கிய சொத்தில் அண்ணன் தனது தம்பிக்கு விடுதலை ஆவணம் எழுதிக்கொடுக்கிறார். 1/2 பங்கு சொத்தின் சந்தை மதிப்பு ரூ. 30,00,000 எனில் விதிக்கத்தக்க முத்திரைத் தீர்வை எவ்வளவு?

(A) ரூ. 20,000
(B) ரூ. 30,000
(C) ரூ. 25,000
(D) ரூ. 1,20,000

34. The surcharge is not levied for the instrument of

(A) Sale of immovable property

(B) Gift of immovable property

(C) Settlement of immovable property

(D) Mortgage with possession of immovable property

மிகுவரி விதிக்கப்படாத முறையாவணம் எது

(A) அசையாச் சொத்து விற்பனை

(B) அசையாச் சொத்து தானம்

(C) அசையாச் சொத்து ஏற்பாடு

(D) அசையாச் சொத்தின் மீது சுவாதீனத்துடன் கூடிய அடமானம்

35. What is the stamp duty (including surcharge if any) for a Deed of Gift of immovable property valued at 5,65,000/- and movable Asset Rs. 1,00,000

(A) Rs. 46,550
(B) Rs. 44,550
(C) Rs. 39,550
(D) Rs. 57,300

அசையாச் சொத்தின் மதிப்பு ரூ. 5,65,000 மற்றும் அசையும் சொத்தின் மதிப்பு ரூ. 1,00,000 உள்ள தான ஆவணத்திற்கு விதிக்க வேண்டிய முத்திரைத் தீர்வை (மிகுவரி இருப்பின் அது உட்பட) எவ்வளவு?

(A) ரூ. 46,550
(B) ரூ. 44,550
(C) ரூ. 39,550
(D) ரூ. 57,300

36. What is the stamp duty payable for an instrument of partition between co-owners who are not family members as detailed below?

Schedule A property valued Rs. 15,00,000 alloted to Mr. X

Schedule B property valued Rs. 20,00,000 alloted to Mr. Y

Schedule C property valued Rs.10,00,000 alloted to Mr.Z.

(A) Rs. 3,15,000
(B) Rs. 1,80,000
(C) Rs. 1,75,000
(D) Rs. 1,00,000

கீழே கொடுக்கப்பட்ட விவரங்கள் படி குடும்ப உறுப்பினர் அல்லாத கூட்டுரிமையாளர்களுக்கிடையேயான பாக ஆவணத்திற்கு விதிக்கத்தக்க முத்திரைத் தீர்வை யாது?

திரு. 'X' என்பவர் அடையும் 'A' சொத்து மதிப்பு ரூ. 15,00,000

திரு. 'Y' என்பவர் அடையும் 'B' சொத்து மதிப்பு ரூ. 20,00,000

திரு. 'Z என்பவர் அடையும் 'C சொத்து மதிப்பு ரூ. 10,00,000

(A) ரூ. 3,15,000
(B) ரூ. 1,80,000
(C) ரூ. 1,75,000
(D) ரூ. 1,00,000

37. Land and Building for 30 years with a monthly rent of Rs. 10,000 and an advance of Rs. 1,00,000 Leased out. What will be the stamp duty levied on such Lease.

(A) Rs. 1,48,000 (B) Rs. 37,000

(C) Rs. 1,44,000 (D) Rs. 25,000

முன்பணம் ரூ. 1,00,000 மற்றும் மாத வாடகை ரூ. 10,000 வீதம் 30 வருட காலத்திற்கு நிலம் மற்றும் கட்டிடம் குத்தகைக்கு விடப்படுகிறது. அக்குத்தகைக்கு விதிக்க வேண்டிய முத்திரைத் தீர்வை எவ்வளவு?

(A) ரூ. 1,48,000 (B) ரூ. 37,000

(C) ரூ. 1,44,000 (D) ரூ. 25,000

38. The Rent of property is Rs. 1,00,000 per annum. There is no advance. Lease period is for 5 years between 01.06.2012 to 31.05.2017 is surrendered after expiry of the above period. What will be the stamp duty chargeable for the document.

(A) Rs. 5,000 (B) Rs. 100

(C) Rs. 40 (D) Rs. 300

சொத்தின் வருட வாடகை ரூ. 1,00,000 - முன்பணம் இல்லை. குத்தகை காலம் 01.06.2012 முதல் 31.05.2017 வரை 5 ஆண்டுகள். தற்போது மேற்கண்ட குத்தகை காலம் முடிந்து குத்தகை ஒப்படைப்பு செய்யப்படுகிறது. இவ்வாவணத்திற்கு விதிக்க வேண்டிய முத்திரைத் தீர்வை எவ்வளவு?

(A) ரூ. 5,000 (B) ரூ. 100

(C) ரூ. 40 (D) ரூ. 300

39. What is the stamp duty chargeable for the Receipt deed as defined by section 2(23) for the loan of Rs. 1,00,000/- repaid in full?

(A) One hundred Rupees (B) One Thousand Rupees

(C) One Rupee (D) Ten Rupees

ரூ. 1,00,000 - கடன் முழுமையாக திருப்பி செலுத்தியதற்கு பிரிவு 2(23) ன்படி எழுதப்பட்ட ரசீது ஆவணத்திற்கு விதிக்கத்தக்க முத்திரைத் தீர்வை எவ்வளவு?

(A) நூறு ரூபாய் (B) ஆயிரம் ரூபாய்

(C) ஒரு ரூபாய் (D) பத்து ரூபாய்

40. What is the stamp duty chargeable for the security Bond executed for Rs. 50,000?

(A) Rs. 80 (B) Rs. 50

(C) Rs. 500 (D) Rs. 100

ரூ. 50,000-க்கு எழுதப்பட்ட ஜாமீன் பத்திரத்திற்கு (Security Bond) விதிக்க வேண்டிய முத்திரைத் தீர்வை எவ்வளவு?

(A) ரூ. 80 (B) ரூ. 50

(C) ரூ. 500 (D) ரூ. 100

41. The 'Collectors' for the purpose of section 31 & 32 of the Indian Stamp Act, 1899 in respect of instruments of Power of Attorney

(A) All the District Registrars (Admin) and all the Sub Registrars

(B) District Registrar (Audit)

(C) Grade I Sub Registrars only

(D) District Registrar (Admin) Only

இந்திய முத்திரைச் சட்டம் 1899 பிரிவு 31 மற்றும் 32ன் படி எழுதிக் கொடுக்கும் அதிகார ஆவணங்களுக்கு "ஆட்சியர்" எனக்குறிக்கப்படுபவர்

(A) அனைத்து மாவட்டப் பதிவாளர்கள் (நிர்வாகம்) மற்றும் அனைத்து சார்பதிவாளர்கள்

(B) மாவட்டப் பதிவாளர் (தணிக்கை)

(C) முதல் நிலை சார்பதிவாளர்கள் மட்டும்

(D) மாவட்டப்பதிவாளர் (நிர்வாகம்) மட்டும்

42. Supplemental Deed under Sec 4 can be employed only for

(A) Sale, Mortgage or settlement deeds

(B) Lease Deed

(C) Release Deed

(D) Gift Deed

பிரிவு 4 ன் படி துணை ஆவணம் எழுதப்படுவது

(A) கிரையம், அடமானம் அல்லது ஏற்பாடு ஆவணங்களுக்கு

(B) குத்தகை ஆவணம்

(C) விடுதலை ஆவணம்

(D) தான ஆவணம்

43. What is the Stamp duty for the Power of Attorney given for a consideration of Rs. 2,00,000?

(A) Rs. 2,000
(B) Rs. 8,000
(C) Rs. 14,000
(D) Rs. 10,000

ரூ. 2,00,000 கைமாறு தொகை பெற்றுக் கொண்டு எழுதிக் கொடுக்கும் அதிகார ஆவணத்திற்கு முத்திரைத் தீர்வை எவ்வளவு?

(A) ரூ. 2,000
(B) ரூ. 8,000
(C) ரூ. 14,000
(D) ரூ. 10,000

44. The Land is gifted by Mr. X to the charitable Trust. The market value of the property as per Guideline is Rs. 5,00,000. There is no consideration received by Mr. X. The Trust is approved under section 80G of the Income Tax Act, 1961. Estimate the stamp duty to be levied.

(A) Rs. 35,000
(B) Rs. 5,000
(C) Rs. 17,500
(D) Rs. 40,000

ஒரு அறக்கட்டளைக்கு திரு. 'X' என்பவர் வழிகாட்டிபடி ரூ. 5,00,000 சந்தை மதிப்புள்ள நிலத்தினை தானமாக வழங்குகிறார். திரு. 'X' கைமாறு தொகை ஏதும் பெறவில்லை. அறக்கட்டளையானது வருமான வரிச்சட்டம் 1961 பிரிவு 80Gன் படி அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. விதிக்கத்தக்க முத்திரைத் தீர்வையை கணக்கீடு செய்க.

(A) ரூ. 35,000
(B) ரூ. 5,000
(C) ரூ. 17,500
(D) ரூ. 40,000

45. Which of the following documents can be impounded under section 33 of the Indian Stamp Act, When it is not Stamped for the face value?

(A) Release
(B) Partition
(C) Settlement
(D) All of the above documents

ஆவணத்தின் முக மதிப்பிற்கு முத்திரையிடாத போது எத்தகைய ஆவணங்களை இந்திய முத்திரைச் சட்டம் பிரிவு 33ன்படி முடக்கம் செய்ய இயலும்.

(A) விடுதலை
(B) பாகம்
(C) ஏற்பாடு
(D) மேற்கண்ட அனைத்து ஆவணங்களும்

46. Stamp duty for an instrument of Release shall be borne by

(A) the Releasor (B) the Releasee

(C) the Releasor and the Releasee (D) none of the above

விடுதலை ஆவணத்திற்கான முத்திரைத் தீர்வையை செலுத்தக் கடமைப்பட்டவர்

(A) விடுதலை செய்பவர்

(B) விடுதலை பெறுபவர்

(C) விடுதலை செய்பவர் மற்றும் விடுதலை பெறுபவர்

(D) மேற்கண்ட எவருமில்லை

47. Licensed stamp vendor shall be granted leave

(A) up to 1 year at a time (B) up to 3 months at a time

(C) up to 6 months at a time (D) No time limit

உரிமம் பெற்ற முத்திரைத்தாள் விற்பனையாளருக்கு ஒரே நேரத்தில் எத்தனை நாட்களுக்கு விடுப்பு வழங்கலாம்.

(A) 1 வருடம் வரை (B) 3 மாதங்கள் வரை

(C) 6 மாதங்கள் வரை (D) காலவரையறை இல்லை

48. Promissory Note should be drawn upon

(A) Plain Paper (B) Judicial Stamp paper

(C) Non-judicial Stamp paper (D) None of them

கடன் ஒப்புச் சீட்டு எழுதப்படுவது

(A) வெள்ளைத்தாளில் (B) நீதி-சார்ந்த முத்திரைத்தாளில்

(C) நீதி-சாராத முத்திரைத்தாளில் (D) இவற்றில் எதுவுமில்லை

49. For the Document to be registered in Chennai, the Stamp papers can be purchased from

(A) Any part within Tamil Nadu State

(B) Any Part of India

(C) Any Part of India except Jammu and Kashmir

(D) Chennai Only

சென்னையில் பதிவு செய்யும் ஆவணத்திற்க்கு எங்கிருந்து முத்திரைத்தாள்களை வாங்கலாம்

(A) தமிழ்நாடு மாநிலத்திற்குட்பட்ட எந்தப் பகுதியிலிருந்தும்

(B) இந்தியாவின் எந்தப் பகுதியிலிருந்தும்

(C) ஜம்மு-காஷ்மீர் தவிர இந்தியாவின் எந்தப் பகுதியிலிருந்தும்

(D) சென்னையில் மட்டும்

50. An instrument executed in Coimbatore brought before the District Registrar under section 31 for adjudication as to proper stamp on 01.05.2017. He feels it is insufficiently stamped. The date of execution 01.01.2017. Now the DR has to

(A) Adjudicate the instrument by collecting the deficit duty

(B) Return the instrument as it is time barred

(C) Impound the instrument under section 33

(D) Refer the matter to the DIG

கோயம்புத்தூரில் எழுதப்பட்ட ஆவணம் பிரிவு 31ன் கீழ் மாவட்டப் பதிவாளரிடம் முறையான முத்திரைத் தீர்வை தீர்வுறுதிக்காக 01.05.2017ல் தாக்கல் செய்யப்படுகிறது. ஆவணம் போதிய முத்திரைத் தீர்வை தாங்கியிருக்கவில்லை என மாவட்டப்பதிவாளர் கருதுகிறார். ஆவணம் 01.01.2017ல் எழுதப்பட்டது. மாவட்டப் பதிவாளர் தற்போது செய்ய வேண்டியது.

(A) குறைவு முத்திரைத் தீர்வை பெற்றுக் கொண்டு ஆவணத்தினை தீர்வுறுதி செய்ய வேண்டும்

(B) காலம் கடந்ததாகக் கருதி ஆவணத்தினை திருப்பி அளிக்க வேண்டும்

(C) பிரிவு 33ன் கீழ் ஆவணத்தினை முடக்கம் செய்ய வேண்டும்

(D) துணைப்பதிவுத் துறைத் தலைவருக்கு இது குறித்து தெரியப்படுத்த வேண்டும்

51. Stamp duty for an instrument of 'Exchange' is borne by

(A) either one of the Parties to the document

(B) the Parties in equal share

(C) the Parties in unequal share

(D) the Person who present and execute the document

பரிவர்த்தனை ஆவணங்களுக்கு முத்திரைத் தீர்வை செலுத்த கடமைப்பட்டவர்

(A) ஆவணத்திற்கு சம்மந்தப்பட்ட இரண்டு நபர்களில் ஒருவரால்

(B) ஆவணத்திற்குரிய நபர்களால் சமமாக

(C) ஆவணத்திற்குரிய நபர்களால் சமமின்றி

(D) ஆவணத்தினை எழுதி தாக்கல் செய்பவரால்

52. Stamp duty for an instrument of Partition is borne by

(A) The Parties there to in proportion to their respective shares in the whole property partitioned

(B) The Presentent

(C) The Party who get the larger share

(D) All Parties in equal share

பாக ஆவணத்திற்கு முத்திரைத் தீர்வை செலுத்தக் கடமைப்பட்டவர்

(A) பாகம் செய்து கொள்ளும் நபர்களால் அவரவர் பங்கிற்கு ஏற்ப

(B) தாக்கல் செய்பவரால்

(C) பெரிய பாக உரிமை பெறுபவர்

(D) ஆவணத்திற்கு சம்மந்தப்பட்ட அனைவரும் சமமாக

53. The stamp duty for counter part of lease is borne

(A) by the Lessee

(B) by both Lessor and Lessee

(C) by the Lessor

(D) by the presentent of the document

குத்தகை எதிர்பிரதி (Counter part of lease) ஒன்றின் நேர்வால் முத்திரைத் தீர்வை செலுத்த கடமைப்பட்டவர்

(A) குத்தகை பெறுபவர்

(B) குத்தகை விடுபவர் மற்றும் குத்தகை பெறுபவர் இருவராலும்

(C) குத்தகை விடுபவர்

(D) ஆவணத்தை தாக்கல் செய்பவர்

54. Which of the following instruments may be stamped with adhesive stamps?

(A) instruments chargeable with the duty not exceeding twenty paise except parts of bills of exchange payable otherwise than on demand and drawn in sets

(B) Bills of exchange, and promissory notes drawn or made out of India

(C) Notarial acts

(D) All the above

பின்வருவனவற்றுள் ஒட்டு வில்லைகள் மூலம் முத்திரை இடப்படும் ஆவணங்கள் எவை?

(A) மாற்றுச் சீட்டுகளின் பகுதிகள் தவிர 20 பைசாவிற்கு மேற்படாமல் தீர்வை விதிக்கத்தக்க முறையாவணங்கள்

(B) இந்தியாவிற்கு வெளியில் எழுதப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட மாற்றுச் சீட்டுகளும் (Bills Exchange), கடனுறுதிச் சீட்டுகளும் (Promisory notes)

(C) சான்றுறுதி சார்ந்த செயல்முறையாவணங்கள் (Notarial acts)

(D) மேற்கண்ட அனைத்தும்

55. The 'Receipt' defined in the section ———— of Indian Stamp Act, 1899

(A) 2(18) (B) 2(23)

(C) 23 (D) 27

'ரசீது' என்பது இந்திய முத்திரைச் சட்டம் 1899-ல் ———— பிரிவில் விளக்கப்பட்டுள்ளது.

(A) 2(18) (B) 2(23)

(C) 23 (D) 27

56. The Term 'Paper' is defined in the section———— of Indian Stamp Act 1899.

(A) 2(18)
(B) 18
(C) 23
(D) 2(16-A)

'தாள்' (paper) என்பது இந்திய முத்திரைச் சட்டம் 1899-ல் ———— பிரிவில் விளக்கப்பட்டுள்ளது.

(A) 2(18)
(B) 18
(C) 23
(D) 2(16-A)

57. Impressed stamp includes

I. Labels affixed and impressed by the proper Officer
II. Stamps embossed or engraved on stamped paper
III. Postal Stamps

(A) I is correct
(B) II is correct
(C) I and II is correct
(D) I, II, III are correct

பதிப்பு வகை முத்திரைத்தாள்கள் என்பவை

I. உரிய அலுவலரால் ஒட்டப்பட்ட மற்றும் பதிக்கப்பட்ட முகப்புச் சீட்டுக்கள்
II. முத்திரைத்தாள் மீது செதுக்கப்பட்ட அல்லது பொறிக்கப்பட்ட முத்திரைகள்
III. அஞ்சல் வில்லைகள்

(A) I மட்டும் சரி
(B) II மட்டும் சரி
(C) I, II சரி
(D) I, II, III சரி

58. The Indian Stamp Act 1899 extends to

(A) The territory of India including the state of Jammu and Kashmir
(B) The territory of India excluding the State of Jammu and Kashmir
(C) The territory of India excluding Union territories
(D) The territory of Capital Delhi

செயல்படும் பகுதி இந்திய முத்திரைச் சட்டம் 1899

(A) ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலம் சேர்த்து இந்திய எல்லைப் பரப்பு முழுமையும்
(B) ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலம் நீங்கலாக உள்ள இந்திய எல்லைப் பரப்பு
(C) யூனியன் பிரதேசங்கள் எல்லை நீங்கலான இந்திய எல்லைப்பரப்பு
(D) தலைநகரம் 'டில்லி' எல்லைப்பரப்பு

59. The Indian Stamp Act came into force on

(A) 01.01.1889 (B) 01.07.1989

(C) 01.07.1899 (D) 01.01.1899

இந்திய முத்திரைச் சட்டம் நடைமுறைக்கு வந்த நாள்

(A) 01.01.1889 (B) 01.07.1989

(C) 01.07.1899 (D) 01.01.1899

60. The Stamp duty levied for the Revocation of Settlement deed is

(A) Rs. 50

(B) Rs. 100

(C) 1% of market value of the property said in document

(D) Rs. 80

ஏற்பாடு ஒன்றை ரத்து செய்வதற்கு விதிக்கக்கூடிய முத்திரைத் தீர்வை

(A) ரூ. 50

(B) ரூ. 100

(C) ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சொத்தின் சந்தை மதிப்பிற்கு 1%

(D) ரூ. 80

61. An agreement relating to deposit of title deeds made by way of security for repayment of loan of Rs. 23,15,300 is chargeable to stamp duty of

(A) Rs. 23,153 (B) Rs. 23,155

(C) Rs. 25,000 (D) Rs. 20,000

ரூ. 23,15,300-க்கு கடனை செலுத்துவதற்கான உரிமை ஆவணங்கள் வைப்பீடு தொடர்பான உடன்படிக்கைக்கு வசூலிக்கத்தக்க முத்திரைத் தீர்வை

(A) ரூ. 23,153 (B) ரூ. 23,155

(C) ரூ. 25,000 (D) ரூ. 20,000

62. Which section of ISA Authorise to collect deficit Stamp duty if an instrument unduly stamped by accident is presented before collector or Registering Officer with in 1 year from the date of execution.

(A) 40
(B) 41
(C) 42
(D) 35

ஒரு ஆவணம் எதிர்பாராவிதமாக உரிய முத்திரைத் தீர்வை தாங்காத பட்சத்தில், தன்னிச்சையாக அத்தகைய ஆவணத்தினை ஆட்சியர் முன், ஆவணம் எழுதிக்கொடுத்த ஓராண்டிற்குள் தாக்கல் செய்யும்போது அதற்கான உரிய முத்திரைத் தீர்வையினை வசூலிக்க இந்திய முத்திரைச் சட்டத்தின் எந்தப் பிரிவு அதிகாரம் வழங்கியுள்ளது.

(A) 40
(B) 41
(C) 42
(D) 35

63. Which section of ISA says "Instrument not duly Stamped inadmissible as evidence".

(A) 31
(B) 33
(C) 35
(D) 37

"உரிய முறையான முத்திரைத் தீர்வையிடாத ஆவணம் சான்றாக (சாட்சியாக) அனுமதிக்கப்படாது" என இந்திய முத்திரைச் சட்டத்தின் எப்பிரிவு கூறுகிறது?

(A) 31
(B) 33
(C) 35
(D) 37

64. When a document has been admitted in evidence of a suit, on the ground of duly stamped, the court can revise the above under section

(A) 36
(B) 58
(C) 60
(D) 61

சான்றாவணமாக ஒரு ஆவணத்தினை அது உரிய முத்திரைத் தீர்வையினை தாங்கியுள்ளது என தீர்மானித்து அனுமதிக்கப்பட்ட பின்னர் இந்தப் பிரிவின் கீழ் நீதிமன்றம் எடுத்துரைத்தல் (Revise) நடவடிக்கையினை மேற்கொள்ள இயலும்.

(A) 36
(B) 58
(C) 60
(D) 61

65. The Sub registrar who impounds an instrument under section 33 has to

(A) Send the original instrument to DR

(B) Send the Copy of the Instrument to DR

(C) Send mere letter to DR is enough

(D) Send the Copy along with letter to DR

சார்பதிவாளர் பிரிவு 33ன் கீழ் ஆவணத்தினை முடக்கம் செய்தால்

(A) அசல் ஆவணத்தினை மாவட்டப்பதிவாளருக்கு அனுப்ப வேண்டும்

(B) ஆவணத்தின் நகலினை மாவட்டப் பதிவாளருக்கு அனுப்ப வேண்டும்

(C) கடிதத்தை மட்டும் மாவட்டப் பதிவாளருக்கு அனுப்புதல் போதுமானது

(D) கடிதத்துடன் ஆவண நகலினை வைத்து மாவட்டப் பதிவாளருக்கு அனுப்ப வேண்டும்

66. Where an instrument is improperly stamped it may certified as duly stamped on payment of duty. Such an instrument have be considered duly stamped from which date?

(A) From the date of presentation

(B) From the date of its execution

(C) From the date of First purchase of Stamp paper

(D) After Six months of the Certificate

முறையற்ற முத்திரையிடப்பட்ட ஆவணங்களுக்கு உரிய முத்திரைத் தீர்வைக்கான தொகையினை செலுத்தும்பட்சத்தில் உரிய முத்திரைத் தீர்வையினை தாங்கியுள்ளதாக சான்றிடப்பட்டால் எந்த நாளிலிருந்து உரிய முத்திரைத் தீர்வை தாங்கியுள்ளதாக கருத வேண்டும்?

(A) ஆவணம் தாக்கல் செய்த நாளிலிருந்து

(B) ஆவணம் எழுதிக் கொடுக்கப்பட்ட நாளிலிருந்து

(C) முதல் முத்திரைத்தாள் வாங்கிய நாளிலிருந்து

(D) சான்றிட்ட ஆறு மாதத்திற்குப் பின்

67. When an instrument has been impounded only because it has been written in contravention of section 13 or 14, the collector

(A) may refund the whole penalty paid

(B) may refund the portion of penalty paid

(C) There is no refund

(D) 50% of penalty refunded

பிரிவு 13 மற்றும் 14க்கு புறம்பாக எழுதப்பட்ட காரணத்திற்காக ஆவணம் முடக்கம் செய்யப்பட்டால் ஆட்சியர்

(A) செலுத்திய முழு அபராதத் தொகையினை திரும்ப வழங்கலாம்

(B) செலுத்திய அபராதத் தொகையின் ஒரு பகுதியை வழங்கலாம்

(C) திரும்ப வழங்க இயலாது

(D) 50 அபராதத்தினை திரும்ப வழங்கலாம்

68. If any person failing to cancel an adhesive stamp in a manner prescribed as per section 12 shall be punishable with fine

(A) of Rs. 5,000

(B) upto Rs. 100

(C) of Rs. 500

(D) upto Rs. 1,000

பிரிவு 12ன்படி ஒட்டு முத்திரை (வில்லை)யை ரத்து செய்யக்கோரும் நபரொருவரும் அந்தப் பிரிவின்படி வகுத்துரைக்கப்பட்ட முறையில் ரத்து செய்வதற்கு தவறுகையில் கீழ்கண்ட பணத்தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்

(A) ரூ. 5,000

(B) ரூ. 100- வரை

(C) ரூ. 500

(D) ரூ. 1,000-வரை

69. What is the maximum penalty for omission to comply with provisions of section 27?

(A) of Rs. 500

(B) upto Rs. 100

(C) upto Rs. 5,000

(D) upto Rs. 1,000

பிரிவு 27 வகைமுறைகளுக்கு தவறுவதற்கான அதிகப்படியான அபராதம் எவ்வளவு?

(A) ரூ. 500

(B) ரூ. 100-வரை

(C) ரூ. 5,000-வரை

(D) ரூ. 1,000-வரை

70. If company issued a share warrant without being duly stamped, the managing director or secretary or other principal officer of the company shall be punishable with fine which may extend

(A) upto Rs. 5,000
(B) upto Rs. 100
(C) upto Rs. 1,000
(D) upto Rs. 500

பங்குச் சான்றாணை (share warrant) ஒன்று உரியவாறு முத்திரையிடப்படாமல் வழங்கப்படுமாயின், அத்னை வழங்கும் நிறுமமும் அதோடு கூட அது வழங்கப்பட்ட நேரத்தில் நிறுமத்தின் மேலாண்மை இயக்குநராக அல்லது பிற முதன்மை அலுவலராக உள்ள நபர் ஒவ்வொருவரும் கீழ்கண்ட பணத் தண்டனையுடனான தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்.

(A) ரூ. 5,000-வரை
(B) ரூ. 100-வரை
(C) ரூ. 1,000-வரை
(D) ரூ. 500-வரை

71. If a collector, acting under section 31, 40 or 41 feels doubt as to the amount of duty with which any instrument is chargeable may refer it to

(A) The High court
(B) The Chief Controlling Revenue Authority
(C) The Government pleader
(D) The District Collector

பிரிவு 31, 40 அல்லது 41ன் கீழ் செயல்படும் ஆட்சியர் எவரும் ஆவணம் எதற்கு விதிக்கத்தக்க தீர்வைத் தொகை குறித்து சந்தேகம் கொள்வராயின் எவரிடம் தெளிவுரை கோரலாம்?

(A) உயர்நீதிமன்றத்திற்கு
(B) முதன்மை வருவாய் கட்டுப்பாடு அதிகாரிக்கு
(C) அரசு வழக்கறிஞருக்கு
(D) மாவட்ட ஆட்சியருக்கு

72. The Allowance on renewal of certain Debentures is explained under which section

(A) 53
(B) 55
(C) 52
(D) 54

கடனாளி பத்திரங்கள் புதுப்பித்தலின் போது படி வழங்கல் எந்தப்பிரிவில் விளக்கப்பட்டுள்ளது.

(A) 53
(B) 55
(C) 52
(D) 54

73. The Allowances for spoiled stamps is given under section

(A) 52 (B) 55

(C) 54 (D) 49

பாழான முத்திரைத் தாள்களுக்கான சலுகைப்படிகள் எந்தப் பிரிவில் கூறப்பட்டுள்ளது?

(A) 52 (B) 55

(C) 54 (D) 49

74. The Allowance for stamps not required for use is given under which section

(A) 52 (B) 55

(C) 54 (D) 49

உபயோகப்படுத்த தேவையில்லாத முத்திரைத் தாள்களுக்கான சலுகைப் படிகள் எந்தப் பிரிவில் கூறப்பட்டுள்ளது?

(A) 52 (B) 55

(C) 54 (D) 49

75. The Allowance is made for spoiled or misused stamps, the collector may give in lieu thereof— the same value of money after deducting the

(A) 10% of the stamp value (B) Rs. 10 of the stamp value

(C) 10 Paise of the stamp value (D) 20% of the stamp value

பாழாக்கப்பட்ட அல்லது தவறாகப் பயன்படுத்தப்பட்ட முத்திரைத்தாட்களுக்கான படித்தொகை எதுவும் வழங்கப்படும் நேர்வு எதிலும், ஆட்சியர் அதற்குப் பதிலாக அதே மதிப்புடைய பணத்தை எவ்வளவு தொகை கழித்துக் கொண்டு வழங்கலாம்.

(A) முத்திரைத்தாள் மதிப்பில் 10% (B) முத்திரைத்தாள் மதிப்பில் ரூ. 10

(C) முத்திரைத்தாள் மதிப்பில் 10 பைசா (D) முத்திரைத்தாள் மதிப்பில் 20%

76. The collector shall repay the money for the stamps not required for use or useless for the purpose intended if it purchased

(A) with in the period of 1 month (B) with in the period of 6 months

(C) with in the period of 1 year (D) with in the period of 3 months

உபயோகப்படாத அல்லது உபயோகத்திற்கு தேவைப்படாத முத்திரைகளுக்கு உண்டான தொகையினை முத்திரைத்தாள் வாங்கப்பட்டதிலிருந்து எவ்வளவு காலத்திற்குள் திரும்ப வழங்க ஆட்சியர் கடமைப்பட்டவர்

(A) 1 மாதத்திற்குள் (B) 6 மாதத்திற்குள்

(C) 1 வருடத்திற்குள் (D) 3 மாதத்திற்குள்

77. The stamp duty chargeable for instrument of rectification to rectify any error in the description of the property where any previous instrument falling within the purview of section 47-A- is given in section

(A) 47-AA (B) 47-A(2)

(C) 47-A(10) (D) 47-B

பிரிவு 47-A வரம்பிற்குள் வந்த எந்த ஒரு முன்பத்திரத்தின் சொத்து விவரத்திலான எந்தப் பிழையினையும் திருத்துவதாகக் கூறப்படுகிற எந்தப் பத்திரத்திற்குமான முத்திரைத் தீர்வை விதிப்பது குறித்து இப்பிரிவில் கூறப்பட்டுள்ளது.

(A) 47-AA (B) 47-A(2)

(C) 47-A(10) (D) 47-B

78. If an instrument not duly stamped under chapter IV of the Act, the duties and penalties are recovered by collector as the arrears of land revenue under the section

(A) 47 (B) 40

(C) 44 (D) 48

இச்சட்டத்தில் அத்தியாயம் IV ன்படி போதிய முத்திரைத் தீர்வையிடப்படாத ஆவணங்களுக்கு செலுத்துவதற்கு கோரப்படும் தீர்வைகள், அபராதங்களை நிலவருவாய் பாக்கியினை வசூல் செய்வதற்கு நடைமுறையில் உள்ளதின்படி ஆட்சியர் இப்பிரிவின் கீழ் வசூலிக்க வேண்டும்.

(A) 47 (B) 40

(C) 44 (D) 48

79. Where any penalty or excess duty paid under section 35 or 40 can be refunded by CCRA under section?

(A) 47 (B) 40

(C) 45 (D) 46

பிரிவு 35 அல்லது 40ன் கீழ் செலுத்திய அபராதம் அல்லது கூடுதலான தீர்வையை முதன்மை வருவாய் கட்டுப்பாட்டு அதிகாரி இப்பிரிவின் கீழ் திருப்பி அளிக்கலாம்?

(A) 47 (B) 40

(C) 45 (D) 46

80. Every instrument written in contravention of section 13 or 14 shall be deemed to be unstamped as per which section?

(A) 18 (B) 17

(C) 15 (D) 19

பிரிவு 13 அல்லது 14ல் குறிப்பிட்ட நெறிமுறைகட்கு மாறாக எழுதப்படும் பத்திரமானது எப்பிரிவின்படி முத்திரைத் தீர்வை தாங்காத பத்திரமாக கருதப்படும்?

(A) 18 (B) 17

(C) 15 (D) 19

TC.133

068/DD/19

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

## REGISTRATION DEPARTMENT TEST – GROUP – II

(With Books)

Maximum Time : 30 minutes

Maximum Marks : 20

## *IMPORTANT INSTRUCTIONS*

## DESCRIPTIVE TYPE

விரிவான விடையளிக்கும் வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

1. Answers in excess of the prescribed number of questions appearing at the end of the answer book will not be valued.

   விடைகளை குறிப்பிட்டுள்ள எண்ணிக்கைக்கு அதிகமாக எழுதியிருப்பின், விடைத்தாளின் இறுதியில் உள்ள அதிக எண்ணிக்கையிலான விடைகள் மதிப்பீடு செய்யப்படாது.

2. Answer should be in brief and to the point and need not be a verbatim reproduction of printed pages. (Applicable for tests to be answered "with books" only).

   விடைகள் சுருக்கமாகவும், வினாவிற்கு உரிய அளவிலும் இருக்க வேண்டும். புத்தகத்தில் உள்ளவற்றை அப்படியே வார்த்தைக்கு வார்த்தை திரும்ப எழுதக் கூடாது. (இக்குறிப்பு புத்தகங்களுடன் எழுதும் தேர்விற்கு மட்டும் பொருந்தும்)

3 In case of doubt, English version is the final.

   வினாக்களில் சந்தேகமிருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

**Answer any FOUR of the following.**

எவையேனும் <u>நான்கு</u> கேள்விகளுக்கு விடையளிக்கவும். **(4 × 5 = 20)**

1. What is the time period to produce an application for relief under section 49 of Indian Stamp Act?

   இந்திய முத்திரைச் சட்டம் பிரிவு 49ன் படி தீர்வழிக்கான விண்ணப்பமானது எந்த காலவரையறைக்குள் அளிக்க வேண்டும்?

[Turn over

2. Explain the procedure for constitution of valuation committee under section 47-AA.

பிரிவு 47-AAன் கீழ் மதிப்பீட்டுக் குழு அமைப்பது குறித்து விவரிக்கவும்.

3. Explain the Power of a Collector to Stamp instruments impounded.

முடக்கம் செய்யப்பட்ட ஆவணங்களுக்கு முத்திரையிடுவதற்கு ஆட்சியருக்கு உள்ள அதிகாரத்தை விவரிக்கவும்.

4. Define the following :

(a) Collector

(b) Settlement.

கீழ்கண்டவற்றை வரையறுக்கவும்.

(அ) ஆட்சியர்

(ஆ) ஏற்பாடு.

5. Explain the use of adhesive Stamps on the type of instruments, given under the Indian Stamp Rules, 1925.

இந்திய முத்திரை விதி, 1925ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு ஒட்டுவில்லைகளை எந்த ஆவணங்களுக்கு பயன்படுத்த வேண்டும் என்பதை விவரிக்க.

6. Explain the procedure mentioned in the Act for Revision of certain decisions of court regarding the sufficiency as of Stamps.

முத்திரைத் தீர்வையின் போதுமான தன்மை குறித்து நீதிமன்றங்களின் ஒருசில முடிவுகளுக்கான சீராய்வு குறித்து சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளதை விவரிக்க.

---